# ஆண்டு அறிக்கை

## 2023-2024

**கள்ளகுறிச்சி மாவட்டம்** **உளுந்தூர்பேட்டை ஒன்றியம்**

**“யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்**

**சாந்துணையும் கல்லாத வாறு”**

கற்றவர்களுக்கு எல்லா நாடும் தன் நாடாகும்.எந்த ஊரும் தன் ஊராகும். எங்கள் ஊர் பள்ளியான **தாமல்** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் 2023-2024 ம் கல்வியாண்டிற்கான ஆண்டறிக்கை வாசிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

**Education is man’s third eye**

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத் தூறும் அறிவு.

மணலை தோண்ட தோண்ட நீர் சுரப்பது போல எங்கள் பள்ளியில் படிக்க படிக்க அறிவு வளரும் என்பதற்கு முன்னாள் மாணவர்களே சான்று.

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்

பள்ளி இல்லா ஊருக்கு அறிவு பாழ்

ஆனால் அதற்கு வாய்ப்பின்றி எம் ஊரில் **1983**-லேயே தொடக்கப் பள்ளி வந்துவிட்டது. பின் தன் செம்மையான பயணத்தால் வளர்ச்சி அடைந்து **2007** ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக உயர்வு பெற்று இன்று வரை சிறப்புடனே செயல்பட்டு வருகிறது.

இந்த கல்வி ஆண்டு ஜூன் 12 ஆம் தேதி இனிதே துவங்கியது.எம் பள்ளியில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை 92 மாணவர்களும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை 82 மாணவர்களும் ஆக மொத்தம் 4 மாணவ/மாணவியர்கள் தற்போது பயின்று வருகின்றனர்.

/

பாதியில் விட்டு செல்லாமல் நல்ல

பாதையில் விட்டுச் செல்பவரே நல்ஆசிரியர்.

அரசன் இல்லாத நாடு போல எம் பள்ளி இன்று தலைமை ஆசிரியர் இல்லாத பள்ளியாக உள்ளதெனினும்

ஊர்கூடி இழுக்கும் தேர்போல இங்குள்ள 3 பட்டதாரி ஆசிரியர்களும் 4 தற்காலிக ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து எம் பள்ளி எனும் தேரை இழுத்து அதிலுள்ள மாணவதெய்வங்களுக்கு கல்வி எனும் ஆராதனையை சிறப்புடனே செய்து வருகிறோம்.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

1 முதல் 5ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் முறையிலும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு படைப்பாற்றல் கல்வி முறையிலும் கல்வி புகட்டப்படுகிறது.

**கற்க கசடற கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்கு தக.**

எனும் குறளுக்கு இணங்க இங்கு பயிலும் மாணவர்கள் சிறந்த முறையில் கற்பதோடு கற்றபடி வாழ்க்கையில் ஒழுக்கம், ஒற்றுமை, கீழ்படிதல் போன்ற நற்பண்புகளை வளர்த்த பெருமை ஆசிரியர்களையே சாரும்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**

**மாடல்ல மற்ற யவை.**

கல்வி ஒன்றே அழியாத செல்வம் .கல்வி செல்வதோடு பல்வேறு மன்ற செயல்பாடுகளும் நிகழ்த்தப்படுகின்றன.

இலக்கிய மன்றம்

வானவில் மன்றம்

கணித மன்றம்

JRC , சூற்றுச்சூழல் மன்றம் போன்றவை எம் பள்ளியில் செவ்வனே செயல்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களின் பல்வேறு திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன.

அரசால் வழங்கப்படும் அனைத்து வகையான நலத்திட்டங்களும் உரிய காலத்தில் பெற்று மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மாதந்தோறும் மாணவர்களுக்கு சிறார் திரைப்படங்களும் திரையிடப்பட்டு அவர்களின் சிந்தனை திறனும், கற்பனை வளமும் தூண்டப்படுகிறது.

தேன்சிட்டு, புது ஊஞ்சல் இதழ்கள் மூலம் மாணவர்களின் வாசிப்பு திறன் மெருகேற்றப்படுகிறது.

காலை உணவுத் திட்டமும் மதிய உணவும் சிறந்த முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

அது மட்டுமின்றி பெண் குழந்தைகளுக்கு தற்காப்புகலை பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

பெற்றோரை இழந்த மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகை பெற 0 balance-யில் 50 மாணவர்களுக்கு மேல் வங்கி கணக்கு தொடங்கி கொடுக்கப்பட்டுள்ளது.

விடுப்பு இன்றி பள்ளிக்கு வந்த மாணவர்கள், தினந்தோறும் neat-ஆக வரும் மாணவர்கள் ,வகுப்பில் முதல் 3 மதிப்பெண் எடுக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

எங்கள் பள்ளியில் நடைபெறும் விழாக்களுக்கும் பள்ளி வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் SMC தலைவர், உறுப்பினர், ITK தன்னார்வலர்கள் ,முன்னாள் மாணவர்களின் ஒத்துழைப்பு மிகச் சிறப்பாக உள்ளது.

இந்த நல் ஒத்துழைப்போடு வரும் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையை உயர்த்தி இடைநிற்றலை தவிர்த்து எம் பள்ளியை மிளிரும் சிறந்த பள்ளியாக உயர்த்துவதே எம் தலையாய நோக்கமும் அவாவும் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

***"EDUCATION IS THE MOST POWERFUL WEAPON WHICH YOU CAN USE TO CHANGE THE WORLD"***

இத்தகு பெருமைமிகு கல்வியை பெற

பெற்றோர்கள் அனைவரும் குழந்தைகளை நம் பள்ளியில் சேர்த்து பயன் பெறுவீர் !

அரசு பள்ளியில் சேர்ந்து நற்கல்வி பெறுவோம்! வாழ்வை மாற்றுவோம்! உலகை உயர்த்துவோம்! என கூறி இவ்வாண்டறிக்கையை உவகையுடன் நிறைவு செய்கிறேன்!

இப்பள்ளியால் எங்களுக்கு பெருமை

எங்களால் இப்பள்ளிக்கு பெருமை!

நன்றி வணக்கம்!

